*Translation (Sinhala to tamil)*

எனது இலக்கம் DIG/SSCO/Out/941/2024,

பிரதி பொலிஸ்மா அதிபர்,

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களின்

பாதுகாப்பு கண்காணிப்பு ஒருங்கிணைப்பு அலுவலகம்.

2024.09.13

ஜனாதிபதி வேட்பாளர்

பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அவர்கள்.

**<u>அச்சுறுத்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முன்வைத்தல்</u>**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2024.09.11ஆம் திகதி தேசிய புலனாய்வு பிரதானி மேஜர் ஜெனரல் ஜே.ஆர்.குலதுங்க RSP அவர்களால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கௌரவ செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட MOD/NID/SD/TA/2 (VOL-03-54) கடிதம் தொடர்பானது.

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தங்களது பாதுகாப்பு தொடர்பில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலின் தன்மை இம்முறை தேர்தலில் தங்கள் மீதான மக்கள் செல்வாக்கின் நிமித்தம் உயிருக்கு ஏதெனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதனூடாக முழு தேர்தல் பெறுபேறுகளுக்கும் ஏற்படக்கூடிய தாக்கத்தை அடிப்படையாகக்கொண்டு செய்யப்படும் புலனாய்வு அறிக்கை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நீங்கள் கலந்துகொள்ளும் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் போது அந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு தாழ்மையுடன் அறிவிக்கின்றோம்.

புலனாய்வு மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான பா.உ ராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் பா.உ எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக சகல வேட்பாளர்களுக்கும் கீழ் குறிப்பிட்ட பொது விடயங்களின் கீழ் அச்சுறுத்தல் உள்ளது என்றும், அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறும் மேலும் கேட்டுக்கொள்கின்றேன்.

1. பிரதான வீதிகளுக்கு மிக நெருக்கமாக மேடைகளை அமைத்தல்/ மக்கள் கூட்டங்களை நடத்துதல்.

2. பிரமுகர் மற்றும் பிரமுகர் வாகனங்களில் மக்களை நெருங்கி செல்லல், பேசுவது, புகைப்படம் எடுத்தல்.

3. பொது இடங்களை கூட்டங்களுக்காக பயன்படுத்துதலால் எந்தவொரு நபருக்கும் சோதனை இன்றி உள்நுழைதல் மற்றும் வெளியேறுவதற்கான சந்தர்ப்பம் (உதாரணம்: வாரச் சந்தை)

4. பொதுமக்கள் சந்திப்பு, நிகழ்வுகள் மற்றும் வேறு தேவைகளுக்காக செல்லும் போது பாதுகாப்பு முறைமைகளை பின்பற்றாது இருத்தல். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள பிரமுகர் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமை தேவையான பாதுகாப்பு முறைமைகளை பின்பற்றல்.

5. பொதுமக்கள் சந்திப்பு, நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் போது எதிரான நிலைப்பாட்டில் உள்ளவர்கள் மற்றும் அடையாளம் தெரியாதவர்கள், கடும்போக்குவாதத்தில் இருப்பவர்கள், தன்னூக்க செயற்பாட்டாளர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து ஏதேனும் திடீர் தாக்குதல்கள் நடத்தக்கூடிய வாய்ப்புகள்.

எஸ்.எம்.வை.செனவிரட்ன

பிரதி பொலிஸ்மா அதிபர்

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களின்

பாதுகாப்பு கண்காணிப்பு ஒருங்கிணைப்பு அலுவலகம்.

பிரதிகள்

1. சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேர்தல்
2. கோப்பு